# சர்வவியாபி

MISSION PRESS 1840
PONDICHERRY

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

15-05-2022 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் (வைகாசி 1) | வருட சந்தா ₹ 200 | தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 59 | இதழ் 18 | பக்கம்-12


e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L. ஆரோக்கியதாஸ்


## தமிழக திருஅவையின் முதல் மறைசாட்சி



மே 15, 2022, பாஸ்கா கால 5ம் ஞாயிறன்று வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நிறைவேற்றும் திருப்பலியில், அருளாளர் தேவசகாயம் அவர்கள் உட்பட பத்து அருளாளர்களை புனிதர்களாக அறிவிக்கவுள்ளார். (ரோம்) நேரப்படி ஞாயிறு காலை பத்து மணிக்கு, அதாவது இந்திய நேரப்படி பகல் 1.30 மணிக்குத் துவங்கும் திருப்பலியில் Titus Brandsma, **இலாசர் எனப்படும் தேவசகாயம்**, César de Bus, Luigi Maria Palazzolo, Giustino Maria Russolillo, Charles de Foucauld, Marie Rivier, Maria Francesca di Gesù Rubatto, Maria di Gesù Santocanale, Maria Domenica Mantovani ஆகிய பத்து அருளாளர்களை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனிதர்கள் என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறார்.

அருளாளர் தேவசகாயம், தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டாலம் என்ற ஊரில் 1712ம் ஆண்டு ஏப்ரல் 23ம் தேதி பிறந்தார். 1752ம் ஆண்டு, சனவரி மாதம் 14ம் தேதி, தென் திருவாங்கூர் மன்னராக ஆட்சிசெய்த மார்த்தாண்ட வர்மா காலத்தில், இயேசுவை ஏற்றுக்கொண்டு நற்செய்திக்கு சாட்சியாக வாழ்ந்ததால், குமரி மாவட்டத்தில், ஆரல்வாய்மொழியில் உள்ள காற்றாடி மலை என்னும் இடத்தில், அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் கல்லறை, கோட்டாறு மறைமாவட்ட புனித சவேரியார் பேராலயத்தில் உள்ளது. 2012ம் ஆண்டு டிசம்பர் 2ம் தேதி இவர் அருளாளர் என அதிகாரப்பூர்வமாக திருத்தந்தையால் அறிவிக்கப்பட்டார். இவரை அதிகாரப்பூர்வமாகப் புனிதராக அறிவிப்பதற்கு வழியமைக்கும், இவரின் பரிந்துரையால் நடைபெற்ற புதுமையை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2020ம் ஆண்டு பிப்ரவரி 21, அன்று அங்கீகரித்திருந்த நிலையில் தற்போது அவர் புனிதராக அறிவிக்கப்படுகிறார். இந்நிகழ்வு இந்தியத் திருஅவைக்கும், குறிப்பாக தமிழக திருஅவைக்கும் பெரு மகிழ்ச்சியளிப்பதாகவும், உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கும் பெருமையளிப்பதாகவும் உள்ளது.



## பாண்டி–கடலூர் உயர் மறைமாவட்டத்தின் 461 வது அருட்தந்தையை வாழ்த்துகிறோம்

பாண்டி-கடலூர் உயர் மறைமாவட்டத்தின் அணிலாடி பங்கைச் சார்ந்த, கிளைப்பங்கு கீழ்வயலாமூரிலிருந்து திரு. பாக்கியநாதன், திருமதி. சம்பூரணம் இவர்களின் மகன், திருத்தொண்டர். PMS **ஜீவா அவர்கள்,** 09.05.2022 அன்று மாலை, உயர்மறைமாவட்டத்தின் 461 வது குருவாக பேராயர் மேதகு பிரான்சிஸ் கலிஸ்த் அவர்களால், பாண்டிச்சேரி, புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் அருட்பொழிவு செய்யப்பட்டார். பேராயர் தனது மறையுரையில், "ஒரு குரு ஆபேலைப் போல சிறந்ததைக் கடவுளுக்கு கொடுக்க வேண்டும் என்றும், ஆபிரகாமைப்போல நம்பிக்கையோடு முழுவதுமாக கடவுளுக்குக் கொடுக்க வேண்டும் என்றும், மேலும் தொடக்கமும் முடிவும் தெரியாத, பெற்றோர் பெயர் தெரியாத, மெல்கிசெதேக்கைப் போல இனம், மொழி மற்றும் குடும்பம் இவற்றைக் கடந்து முழுவதுமாக தன்னை கடவுளுடைய பணிக்கு அர்ப்பணிக்க வேண்டும்" என்று கூறினார். இத்திருநிகழ்வில் உயர்மறைமாவட்ட குருக்களும், அருட்கன்னியரும், புதிய குருவின் உறவினர்களும் மற்றும் திரளான இறைமக்களும் கலந்து கொண்டு செபித்தனர். புதிய குருவின் பணிச் சிறக்க செபிக்கிறோம், வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் மேசை...

# காலத்தின் தேவை

**மக்கள் கலக்கம்:** பண மதிப்பு இழப்பு (The Hindu May 10, 2022-Rupee a new low amid dollar outflow), பெட்ரோல், டீசல் விலையேற்றம், அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு, வேலை இழப்பு போன்றவை தவிர்க்க முடியாதவை என்று அரசு கைவிரித்து நிற்கின்றது. மாநில அரசுகள் ஒன்றிய அரசுக்கு எதிராக குரல்கொடுப்பதும், ஒன்றிய அரசு மாநில அரசுக்களை குற்றம் சுமத்துவதும் வாடிக்கையாகிவிட்டது. முதலாளித்துவ மனப்பான்மைக்கும் சுயஆட்சி உரிமைக்கும் பூசல் வலுத்துக் கொண்டு வருவதை ஊடகங்கள் வெளிச்சம் போட்டு காட்டுகின்றன. வாக்களித்த மக்களோ வாழ்க்கை இருளிலே மூழ்கிக் கொண்டிருக்கிறதே என்று செய்வதறியாது திணருகின்றனர். ஓட்டுப் போட்டவர்கள் திருஓடு ஏந்தும் காலம் வந்துவிடுமோ என்று மக்கள் கலங்குகின்றனர். வாழ்வின் ஆதாரங்களை இழந்து கொண்டிருக்கும் மக்கள், வாழும் உரிமையே பறிபோகிவிடுமோ என்ற அச்சத்தில் உறைந்து கொண்டிருக்கின்றனர்.

**சட்ட திருத்தங்கள்:** 75 வது சுதந்திர தின விழாவுக்கு தயாரித்துக் கொண்டிருக்கிறோம். காலனி ஆட்சியின் அடிமைப்படுத்தும் சட்டங்களையும், பழக்கங்களையும் உதரித்தள்ள நாம் கடினமாக உழைக்க வேண்டிடும் என்பது நம் பிரதமரின் உறுதியான நம்பிக்கை. அதற்காக அசாதிகா அம்பிர்த் மகோத்சவா (Azadi ka Ambrit Mahotsava), என்ற குறிக்கோள் நிர்ணயித்து செயல்பட அழைப்பு விடுத்திருக் கிறார். (The Hindu, May 10, 2022 - We will reconsider sedition law, centre informs top court). சட்ட சீர்திருத்தங்கள் மக்களின் உரிமைகளை மேன்மைப்படுத்துவதாகவும் பாதுகாப்பதாகவும் இருப்பதாக அமைய வேண்டும். மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் புறம் தள்ளி ஆட்சியாளர்களின் நோக்கங்களை நிறைவேற்ற சட்டங்களை வலைப்பது திருத்துவது நாட்டிற்கு ஆபத்து. (The Hindu, May 10, 2022 - Editorial) அண்டை நாடுகள் அதற்கு எடுத்துக்காட்டாக இருப்பதை ஆட்சியாளர்கள் நினைவிற்கொள்வது நற்பலன் அளிக்கும். ரஷ்யா-உக்ரைன் போர், இலங்கை மக்கள் போராடும், பாகிஸ்தான் ஆட்சி தடுமாற்றம் போன்றவைக்கு காரணம் மக்களால் தாங்கமுடியாத சட்ட வரைவுகளே.

**வள்ளுவம் காட்டும் வழி**

*பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்*
*கொல்குறும்பும் இல்லத நாடு* (குறள் 735).

மாறுபட்டப் பிரிந்திருக்கும் கூட்டங்கள் பலவும், அழிவு செய்யும் உட்பகையும் அரசனை அச்சுறுத்தும் கொடியவர்களும் இல்லாதிருப்பது நாடு. இனம், மொழி, சாதி போன்றவைகளைத் கடந்து மக்களை ஒன்றுபடுத்தி, உட்பகைகள் எழாமல் மக்கள் அன்புறவிலே பழகவும், வாழவும் சட்டங்கள் துணை நிற்க வேண்டும்.

**சட்டத்தின் பயன்:** அடுத்தவரின் மதிப்பையும் உரிமையையும் பாதுகாப்பது பண்பட்ட மனிதனின் மேன்மையான குணம். அத்தகைய குணங்களை மக்களிடையே வளர்த்தொடுக்க சட்டங்கள் தேவை. தனி மனிதனும், சமுதாயமும் பண்போடும் அமைதியோடும் வாழ சட்டங்கள் உதவவில்லை என்றால் மனித இனம் அழிவைச் சந்திக்கும் இன்றைய சமுதாயம் சட்டங்களை மதிக்காத மனிதர்கள் நிறைந்த ஒன்றாக மாறிக் கொண்டிருக்கிறது. ஒருசில ஆட்சியாளர்களும், ஒருசில மக்கள் பிரதிநிதிகளும் சட்டத்தை மதிக்காத அடாவடி செயல்பாடுகளை ஊடகங்கள் வெளிபடுத்துகின்றன. உ.ம். மக்கள் பிரதிநிதி ஒருவர், அரசு அதிகாரியை தாக்குவது, பொது மக்கள் சாலை விதிகளை பின்பற்றாமல் செயல்படுவது, மாணவர், சமுதாயம் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவது, ஆசிரியர் பெருமக்களை அவமானப்படுத்துவது.

**திருவிவி-ய சட்டங்கள்:** தனிமனித ஒழுக்கமும், சமுதாய சட்டங்களும் ஒன்றோடொன்று பிணைந்திருப்பவை. சமுதாய நல்-ணக்கத்தையும், மனித மாண்பையும் காக்கும் சட்டங்களை திருவிவி-யம் முன்மொழிகின்றது. இயற்கையையும், படைப்புப் பொருட்களை வழிபடாமல், உள் உரையும் கடவுள் ஒருவரையே வழிபட வேண்டும் என்பது கடவுளால் கொடுக்கப்பட்ட சட்டம். அப்படி வாழ்பவர்கள் ஆயிரம் தலைமுறை வரை ஆசீர்பெறுவர். இன்று கடவுள் வழிபாடு உண்மையானதாக இல்லாமல் சடங்காக மாறிவிட்டது அவலம். அதனால்தான் மக்களின் சமய பூசல்கள் தலைபிரித்தாடுகின்றன. 'உன் தாய் தந்தையை மதித்து நட' பெற்றோரை உபயோகமில்லா பொருளாக தூக்கி எரியும் கலாச்சாரம் வளர்ந்துவிட்டது. 'கொலை செய்யாதே' - பாதுகாப்பு என்ற போர்வையிலே எத்தனையோ நேர்மையாளர்கள் கொலை செய்யப்படுவது கொடுமை. 'விபசாரம் செய்யாதே' பொழுது போக்கு என்ற பெயரிலே பெருநகரங்களில் தம்பதியர் மற்றும் வியாபாரம் எதிராக 'பொய் சான்று சொல்லாதே' பொய்யை உண்மையென சித்தரிப்பது இன்று நீதியாகிவிட்டது. பிறர் வீட்டை கவர்ந்திட விரும்பாதே; 'பிறர் மனைவியை காமுறதே' என்ற சட்டங்களை கடைபிடித்தால் சமுதாயம் செழிப்புறும் (காண்க.வி.ப.நூ. 20:1-17; இச 5:1-12).

**பொன்விதி:** நாட்டின் சட்டங்களையும், கடவுள் கொடுத்த பத்து கட்டளைகளையும் நினைவில் கொள்வது சிரமமாக இருக்கலாம். கடலைச் சுறுக்கி கடுகுக்குள் வைத்த மாதிரி, எல்லாச் சட்டங்களையும் சுறுக்கி தன்னுள் வைத்திருப்பது பொன்விதி. பிறர் உங்களுக்குச் செய்ய் வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்... (மத்.7:12).

**காலத்தின் தேவை:** ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பது தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பன முதுமொழிகள். சிறுவயதில் இருந்து சட்டங்களை மதிக்கும் பண்பினை ஊட்டி வளர்க்க வேண்டும். கல்விக் கூடங்களில் ஒழுக்க நெறிகளுக்கு முத-டம் கொடுக்க வழிவகுக்க அவசியம். கல்வித்தரம் உயரவேண்டும் என்று செயல்படும் ஆட்சியாளர்கள் ஒழுக்க நெறிகளை மாணவருக்கு ஊட்டி வளர்க்க மறப்பது கேடு விளைவிக்கும்.

சட்டங்களை மதித்து நடக்கும் குடிமக்களை உருவாக்க பெற்றோரும், ஆசிரியரும், ஆட்சியாளரும் முயற்சிப்பது காலத்தின் தேவை.



**22-05-2022**

## "விண்ணில்....... மண்ணில்..."



**அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,**
பங்குத்தந்தை, முன்னூர்.

திப.15:1-2,22-29 திருவெ.21:10-14,22-23, யோவான் 14:23-29

**இ**ன்று ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெரு விழாவைக் கொண்டாடுகிறோம். இயேசுவின் பிறப்பு, திருமுழுக்கு, உருமாற்ற நிகழ்வு, மரணம் மற்றும் உயிர்ப்பு இவற்றைப் போலவே இன்றைய விழாவும் நான்காம் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த விண்ணேற்றம் நிகழ்வு இரண்டு இறையியல் கருத்துக்களை முன்வைக்கிறது. முதலாவதாக கிறிஸ்துவின் மாட்சிமையின் உச்சமாகவும், இரண்டாவதாக அவர் இவ்வுலகில் மேற்கொண்ட திருப்பணி இத்துடன் முடிவுக்கு வருகிறது என்பதையும் உணர்த்துகின்ற விதமாகவும் அமைகிறது.

***விண்ணில்...:*** இயேசுவின் உயிர்ப்பிற்கு முன்பு துன்புறும் ஊழியனாக அறியப்பட்ட இயேசு, தற்போது தந்தை கடவுளின் மாட்சியில் பங்கேற்று "ஆண்டவராக" தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறார் (பிலி.2:6-11). எனவே தான் 'விண்ணுலகிற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்' என்று நாம் நமது இறை நம்பிக்கை அறிக்கையில் வெளிப்படுத்துகின்றோம். எனவே விண்ணில் கிறிஸ்து நம் சார்பாக கடவுளின் திருமுன் நிற்கின்றார் (எபி.9:24) என்கின்ற போது நமக்கு மகிழ்ச்சியும் நம்பிக்கையும் பிறக்கின்றது. இவ்வாறு இயேசு விண்ணேற்றம் அடைந்ததால் அவர் நம்மைக் கைவிடவில்லை. மாறாக என்றும் தலைமை குருவாக இருந்து, நமக்காக தந்தையிடம் பரிந்துபேசி என்றுமே உயிர் வாழ்கிறார் (எபி.7:25).

***விவிலியத்தில்...:*** திருவிவிலியத்தில் 'ஆண்டவருடைய விண்ணேற்றம்' மூன்று இடங்களில் மட்டுமே விளக்கப்படுகிறது, மத்தேயு மற்றும் யோவான் நற்செய்தியாளர்கள் இதனை தங்கள் எழுத்துக்களில் குறிப்பிடவில்லை. மாற்கு 16:19-20; லூக்.24:50-53; திருத்தூதர்கள் பணி 1:4-14 என்று மூன்று இடங்களில் ஆண்டவரின் விண்ணேற்றம் விளக்கப்படுகிறது. விண்ணேற்றத்திற்கு முன் தான் நிறுவிய திருச்சபையைக் கட்டமைக்க திருத்தூதர்களை ஆண்டவர் அல்லும் பகலும் தயாரித்தார். உயிர்ப்பிற்கு பிறகு தடுமாற்றமும் பயமும் ஏற்பட்டபோது நாற்பது நாளும் திடப்படுத்தி அவர்களை களம் காண ஊக்குவித்தார். நாற்பது நாட்கள் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. ஆண்டவர் தம்முடைய தந்தையின் திருவுளம் அடங்கிய இறையாட்சிப் பணியை நிறைவேற்ற தன்னையே பாலைவனத்தில் நாற்பது நாட்கள் தயாரித்தார். தற்போது அப்பணி தொடர்ந்து செயலாக்கம் பெற்றிட திருத்தூதர்களை அதே நாற்பது நாட்கள் உயிர்ப்பிற்கு பிறகு தயாரிக்கிறார். முன்னையது அவருடைய சுய தயாரிப்பு, பின்னையது அவர் நிறுவிய திருச்சபைக்கான தயாரிப்பு.

**இரண்டு வாக்குறுதிகள்:** திருச்சபையும் திருத்தூதர்களும் இறையாட்சியின் புதிய களம் காண இயேசுவால் இரண்டு விதமான வாக்குறுதிகள் முன்மொழியப்பட்டுள்ளன. இந்த இரண்டு வாக்குறுதிகளும் திருச்சபையின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை. முதலாவது இயேசுவின் உடனிருப்பு! இரண்டாவது தூய ஆவியின் வருகை. இம்மானுவேலாக இம்மண்ணில் பிறந்த மாபரன் இயேசு என்றென்றும் இம்மானுவேலாக உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்று சொல்லி தன் பிரசன்னத்தை, உடனிருப்பை உறுதிபடுத்துகிறார். அவருடைய உடனிருப்பு ஒன்றே வலிமையானது, ஆற்றல்மிக்கது. பிரச்சனையால் அலைகழிக்கப்படுகிறபோதும், ஆதரவின்மையால் சோர்ந்து போகிற போதும், மனக்குமுறலால் கொந்தளிக்கிறபோதும், சாவின் விளிம்பில் தத்தளிக்கிற போதும் "அஞ்சாதீர்! நான் உடனிருக்கிறேன்" என்று நம்மை தேற்றி திடப்படுத்தி (மத்.8:23-27) நெறிபடுத்துபவர் அவரே. இரண்டாவதாக, தூய ஆவியின் வருகைத்தான் திருச்சபையின் பிறப்பிற்கான அடித்தளம். ஆகையால் தான் "நான் போகாவிட்டால் துணையாளர் உங்களிடம் வர மாட்டார். நான் போனால்தான் அவரை உங்களிடம் அனுப்புவேன்" (யோவா.16:7) என்று இயேசு கூறுகிறார். தூய ஆவியைப் பற்றி ஆண்டவர் இயேசு போதுமான அளவுக்கு சீடர்களுக்கு விளக்கி கூறியுள்ளார். எனவே தூய ஆவியாரின் வருகைதான் இயேசுவின் இரண்டாவது வாக்குறுதி.

***வானதூதர்களின் அன்புக் கட்டளை:*** "ஏன் வானத்தை அண்ணாந்துப் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள்?" என்று இன்றைய முதல் வாசகத்தில் வானதூதர்கள் கேட்கின்ற கேள்வி திருச்சபைக்கு (நமக்கு) வைக்கப்படுகிற சவால். இதே வானதூதர்கள் மூன்று முறை 'ஏன்' என்ற கேள்வியை அழுத்தம் திருத்தமாக கேட்கிறார்கள். இரண்டு முறை மரிய மதலேனாளிடம் முறையே "உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவது ஏன்?" (லூக்.24:5) என்றும், "அம்மா ஏன் அழுகிறீர்" (யோவா.20:13) என்றும் கேட்கிறார்கள். இன்றைய முதல் வாசகத்தில் அதே வானதூதர்கள் "ஏன் வானத்தை அண்ணாந்துப் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்கள்?" என்று மூன்றாவது முறையாக கேட்கிறார்கள். "ஏன்" என்ற கேள்வியால் உயிர்ப்பு செய்தியை அறிவிக்கும் முதல் நற்செய்தி இப்பொழுது அதே "ஏன்" என்ற கேள்வியால் திருத்தூதர்கள் அனைவரும் நற்செய்தியின் தூதுவர்களாக மாறுகிறார்கள். ஆம் 'விண்ணேற்றம் அடைந்ததை கண்டீர்களல்லவா?' இப்பொழுது இயேசு விண்ணில் உயிரோடு வாழ்கிறார். அவ்வாறே மீண்டும் இரண்டாம் முறை வருவார். அவருடைய பணி முடிந்துவிட்டது. வானத்தை அண்ணாந்து பார்த்தது போதும் திருச்சபையின் பணி தொடங்கிவிட்டது. "மண்ணில் நற்செய்தி அறிவிக்க புறப்படுங்கள்" என்ற அறைகூவல் வானதூதர்களால் இங்கே சுட்டிக்காட்டப்படுகிறது.

***மண்ணில்...:*** ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா நமது வாழ்வின் இலக்கை ஆய்வு செய்ய அழைப்பு விடுக்கின்றது. இயேசுவின் விண்ணேற்றம் நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரி. இயேசுவைப் போல நாமும் விண்ணேற்படைந்து கடவுளின் வலப்புறம் அமரவேண்டும் என்பதே இறைவனின் திருவுளம். அதுவே நம் வாழ்வின் இலக்காக அமைய வேண்டும். இயேசுவின் விண்ணேற்றத்தின் முழுமையான அர்த்தம், மண்ணில் வாழ்ந்த இயேசு, இப்பொழுது விண்ணில் தந்தை கடவுளோடு இணைந்து வாழ்கிறார். எனவே இவ்வுலக வாழ்வு நமக்கு ஒரு இடைப்பயணமே. நாம் இந்த மண்ணுலகை சார்ந்தவர்களாயினும் விண்ணுலகை சார்ந்தவர்களாக நம் வாழ்வு அமைய வேண்டும். இயேசு சீடர்களுக்கு கொடுத்த கடைசி இரண்டு அன்புக் கட்டளைகளான "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறை சாற்றுங்கள்". "தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்" என்ற வார்த்தைகளை நாமும் ஏற்று நம்முடைய சிந்தனை, சொல், செயல்கள் வழியாக இயேசு எவ்வாறு இம்மண்ணில் வாழ்ந்தாலும் இப்பொழுது விண்ணில் வாழ்கிறாரோ அதேபோல நாமும் இம்மண்ணில் வாழ்ந்தாலும் திருத்தூதர்களை பின்பற்றி விண்ணில் வாழ்வதற்கான முயற்சிகளை நம்முடைய செயல்களில் வெளிக்கொணர நம் வாழ்வை அமைத்துகொள்ள வேண்டும்.



# வியாபியின் மகிழ்வு

– சுவாமி ஆ. லூயிஸ்.

ஜென்மப்பாவம் கர்மப்பாவம் இல்லாமல் தூய ஆவியின் ஆற்றலால் பாவமில்லா மரியன்னை வழி பிறக்கின்றார். பாவமில்லாமல் முப்பத்திமூன்று ஆண்டுகள் வாழ்ந்து, நமது மீட்பராக சிலுவையில் அறையுண்டு பாடுபட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் தான் கூறியபடி உயிர்த்தெழுந்து இப்போது படைப்போடும் மனித குலத்தோடும் ஒன்றுபட்டு வாழ்கின்றார் நம்மோடு பயணம் செய்கின்றார். உலக முடிவு வரை உங்களோடு இருப்பேன் என்பதை எண்பித்து வருகிறார். உயிர்த்த இறைவன் நம்மோடு உள்ளார் என்று உணர்ந்து வாழ்வோம்.

**உயிர்த்த ஆவியில் நாம்:** இறைவனின் ஆவியே நமது சாயல் இவ்வாறு உயிர்த்த ஆண்டவரின் ஆவியில் நாம். இவ்வாறு ஆவியில் இடம் பெறும் உறவே என்றும் எப்போதும் எங்கும் நம்மோடு இருக்கும். உடல் தொடர்பு தற்கா-கம், ஆவிதொடர்பு நிரந்தரம். எனவேதான் கடவுள் தனது மகன் வழியாக படைப்பையும் மனித குலத்தையும் ஒரு புதிய உடன்படிக்கையில் ஒன்றித்து பாதுகாத்து பராமரித்து வருகிறார். மனிதகுலம் பொதுவாக நம்புவதை இயேசு நமக்குத் தெளிவாகத் தருகின்றார். இப்போது அருட்சாதன முறையில் பெற்று வருகின்றோம். பின்பு நேரடியாக செம்மறியின் விருந்தில் நித்தமும் தரிசனத்தில் சுவைப்போம்.

இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்ற வேண்டுகோளுக்கு ஏற்ப உயிர்த்த ஆண்டவரைத் தான் ஒவ்வொரு திருப்ப-யிலும் நாம் அனுபவித்து வருகிறோம். அருள் அடையாள அனுபவம் அன்றாடம் இடம் பெறுவதால் நிரந்தரமாக ஆவியில் திருச்சபை ஒன்றித்திருக்கிறது. உடலுக்கு கனம் இருப்பதால் இயல்பாக ஈர்ப்பு சக்தி இருக்கிறது. ஆவிக்கு எடை இல்லை என்பதால் எங்கும் நிறைந்திருக்கிறது. ஊனியல்பு வாழ்வுதான் எல்லார்க்கும் ஏதுவாக இருக்கிறது. ஆவியை இறந்த பிறகு பார்த்துக் கொள்வோம் என்று ஆவி பெறவேண்டிய முக்கியத்துவத்தை இழக்கிறது. இயேசுவை இன்று நாம் சந்திக்க வேண்டும் என்றால், அல்லது இயேசு நம்மை சந்திக்கவேண்டும் என்றால் ஆவிதான் நம் இருவருக்கும் பொதுமையானது. இயேசு எவ்வளவு மிகுந்த அன்போடு தந்தையின் திருவுளத்திற்கு ஏற்ப உடலை அருட்சாதனமாகத் திருப்ப-யில் வழங்குகின்றார், ஆவியை எப்போதும் எங்கும் வழங்கி வருகிறார்.

ஊனியல்பின்படி வாழ்ந்தால் அது ஏற்புடையது அல்ல, ஆவியில் வாழ்கின்றவர்கள்தான் மெய்யாக வாழ்கின்றனர் என்று புனித பவுலடியார் தனது திருமுகங்களில் செவ்வையான பாதையை கிறிஸ்தவ சமூகங்களுக்கும் நமக்கும் வழங்கி வருகிறார். இரத்த உறவை விட வார்த்தை வழிவரும் ஆவி உறவுதான் உகந்தது, உயர்ந்தது, சிறந்தது, தேவையானது எனவே ஆவி வழி வாழ்வு நமது வாழ்வு அமைய அன்றாடம் தியானிப்பது மிகவும் நல்லது. இல்லையேல் ஓயாதத் தொல்லையில் உடல் போராட்டத்தில் நோய்வாய்பட்டிருப்போம். நமது வாழ்வு அனுபவத்தில் இருந்து கற்றுக்கொள்வோம். நமக்கு முன் வாழ்ந்த புனிதர்கள் வழி நமது வாழ்க்கைப் பயணத்தை சீராக்கிக் கொள்வோம்.

இவ்வாறு வியாபியின் மகிழ்வை சுவைத்து நாமும் நலமுடன் வாழ்வோம், சான்று பகர்வோம், மற்றவர்களையும் இத்தகைய அருள் வாழ்விற்கு அழைத்துச் செல்வோம். கிறிஸ்தவர்களின் நற்செய்திப் பகிர்வு இவ்வாறு இன்றைய உலகில் இடம் பெறுவது எவ்வளவு மேலானது என்பதை உணர்ந்து சான்று பகர்வோம். கிறிஸ்தவக் குழுக்களை நன்றாக கட்டி எழுப்பி முதல் கிறிஸ்தவர்களைப் போல வாழ்வோம், வாழ வைப்போம். நமது பலவீனங்கள் மீது கவனம் செலுத்தாமல் நமக்குள் நிரந்தரமாய் இருக்கும் உயிர்த்த ஆண்டவரின் ஆவியில் விழித்தெழுவோம். சிறப்பாக திருஆட்சியாளர்கள் துறவிகள் எடுத்துக்காட்டாகவும், முன்னோடியாகவும், வழிகாட்டுகின்றவர்களாகவும் விளங்க வேண்டுவோம், விழித்திருப்போம், தியானிப்போம்.


## மிஷன் அச்சக வெளியீடுகள்

இறைவனின் அன்னையின் அற்புதமான வரலாறு

**எடுத்து வாசி பாகம் - 1,2.3.4**

ஆசிரியர்: Bro. K.பெர்னார்டு, SFO

நான்கு புத்தகங்கள் சேர்த்து
விலை: ரூ. 570.00



மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி - 605 001

தபால் செலவு தனி

## புதிய நாவல் வெளியீடு

**புனித வெரோணிக்காவின் கைக்குட்டை**

ஆசிரியர்:
ஜெயராஜ் தானியேல்

விலை
ரூ.50.00

மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி - 605 001

தபால் செலவு தனி



## உள்ளம் தேடும் உளவியல்

- அருள்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM
கடலூர்



**கருத்துரை - II**

## திருப்பாடல் 23-க்குள் குவிந்திருக்கும் உளவியல்

**திருப்பாடல் 23-க்** குறித்து **அதிகப் புத்தகம்** எழுதப்பட்டுள்ளது என்பது இறையியல் வல்லுநர்கள், தங்களது கணக்கெடுப்பில் கண்டுபிடித்த உண்மையாகும். திருவிவிலியத்தில் நிறைவான மகிழ்ச்சியைத் தரும் **இறைச்சொத்தாக** இத்திருப்பாடல் அமைந்துள்ளது.

**இஸ்ராயேல் நாட்டிற்குள்ளே ஒரு இன்பச் சுற்றுலா!**

**இன்பவனம் போன்று** காட்சிதரும் ஒரு இனிய தேசம்தான் **இஸ்ரயேல் தேசம். தீயின் வெப்பம்** அதிகரிக்கின்றபோது மட்டுமே பால் பொங்கி வழிகிறது; மேகம் பொங்கித் திரள்கிறது. இஸ்ரயேல் தேசத்திலோ **இறைச்சுடர் எப்போதும் தெய்வீக வெப்பத்தைத்** தந்து கொண்டிருப்பதால், அங்குள்ள **யோர்தான் ஆறு** முப்பொழுதும் பொங்கி ஓடுகிறதாம். வெண்ணிலவின் வெண்மையை ஒத்த பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருக்கும் வெண்பனிமலை என்று சொல்லப்படுகிற **எர்மோன் மலை**. இது இஸ்ரயேலில் உள்ள **மிக உயர்ந்தபனி மூடியமலை முகடு** ஆகும். **இயேசு ஆண்டவர்தாம்** உருமாறுவதற்குத் **தேர்ந்தெடுத்த மலையும்** இதுவேயாகும். இஸ்ரயேல், **லெபனான் மலைத்தொடரையும்** தொட்ட வண்ணமே உள்ளது. இதயங்களின் மென்னையை ஒத்த ரோஜாக்கள் பூத்துக் குலுங்குகிற **சாரோன் சமவெளியும்,** அகம் புறம் இரண்டையும் சுகமாய் வைத்துக்கொள்ள உதவும் அத்திப் பழங்களைத் தரும் அத்தித் தோட்டங்கள் நிறைந்த **பார்பெக்கே நகரமும்** இங்குதான் உள்ளது. தினசரி வாழ்வை சுவைபடுத்திக் கொண்டிருக்கும் திராட்சைக் கனிகள் கனிந்து கிடக்கும் திராட்சைத் தோட்டங்கள் நிறைந்த **பெத்தானியாவும்**, சிலை போன்ற உடலைச் சீர்படுத்திக்கொள்ள பயன்படும் ஒலிவ எண்ணையைத் தரும் ஒலிவத் தோப்புகள் நிறைந்த **ஒலிவ மலையும்** இங்குள்ளது. இப்படி **ஏராளமான வளங்கள் தாராளமாகக் குவிந்து கிடக்கும் செழிப்பின் கிடங்குதான் இஸ்ரயேல் நாடு. இதுதான் விண்ணகமோ** என்று எல்லோரையும் வியக்கவைக்கும் **விந்தைமிகு பூமிதான்** இந்த இஸ்ரயேல் பூமி ஆகும்.

**அள்ள அள்ளக் குறையா ஆசீர்வாதங்கள்** நிறையப்பெற்ற அந்த இஸ்ரயேல் நாட்டினிலே **பாலைவனம்** ஒன்றும் உள்ளது.

**யூதேயா பாலை வனத்திற்குள்ளே ஒரு நீண்டச் சுற்றுலா!**

**உடலை இறைச்சி ஆக்கும் அளவிற்கு வறட்சிமிகு** பகுதிதான் இந்த **யூதேயா பாலைவனம்** ஆகும். இந்த யூதேயா பாலைவனம் நாடுகளின் மையப்பகுதியில் (எசேக்கியேல் 5:5) இருப்பிடம் அமைத்துக் கொண்டுள்ளது. இதனால் **சுடும்சூரியன் தொடுவது** போன்றேயிருப்பதால், **கடும் வறட்சிபடும் கொடிய பகுதியாக** இப்பாலைவனம் உள்ளது. **பூப்பந்தம் போன்ற அந்த இஸ்ரயேல் தேசத்திலே தீப்பந்தம் போன்றிருந்தது அந்த யூதேயா பாலைவனம்.** அவ்வளவு வெப்பம்! இங்கு 140 முதல் 160 டிகிரிவரை கூட வெப்பத்தின் அளவு இருப்பதாக கூறப்படுகிறது. மழைகூட ஓரிருமுறைதான் இப்பாலைவனத்தைச் சந்திக்க வருகிறது. மாறாக **சூறாவளிப் புயலோ, மணல் புயலாகவும், புழுதிப்புயலாகவும்,** எப்போதும் இங்கே தடம்மாறி வீசிக்கொண்டிருக்கும். பகல்பொழுதில் சூரியனைக்கூட விழுங்கும் அளவிற்கு இப்புயல் வீசுகிறது. இச்சமயத்தில் இங்கு பயணிப்பது என்பது **உயிருக்கே ஆபத்தானதாகவும்** முடிகிறது. அதுமட்டுமல்ல. **வறண்ட சுண்ணாம்புப் பாறைகள், குன்றுகள், குகைகள்,** நிறைந்து கிடக்கும் ஏராளமான **மரணப் பள்ளத்தாக்குகளும்** இங்கே மலிந்து கிடக்கும்.

இப்படி எல்லா விதத்திலும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய சூழமைவுகளே இங்கிருப்பதால், Killer Desert, **கொலைப் பாலைவனம்** என்றும் இது அழைக்கப்படுகிறது.

இந்த யூதேயா பாலைவனம்தான் **இறைவார்த்தையில்** முக்கிய பங்குவகிக்கிறது. காரணம்,

**தாவீது** உயிருக்கு பயந்து அலைந்து திரிந்தது இங்குதான்.

**திருமுழுக்கு யோவான்** தமது வாழ்க்கையின் பெரும் பகுதியைச் செலவிட்டதும் இங்குதான்.

**ஆண்டவர்** அதிக நாட்கள் வாழ்ந்த இடமான பெயல்செபாவும் இங்குதான் உள்ளது.

**ஆண்டவர் இயேசு** 40 நாட்கள் உண்ணாநோன்பு இருந்ததும் இங்குதான்.

ஆகவேதான் **யூதேயா பாலைவனம்** விவிலியத்தில் முக்கிய பங்குவகிக்கிறது.

**இப்பாலைவனத்தில் எழுதப்பட்டதா, 23-ம் திருப்பாடல்???**

**இல்லை! இல்லை!!! பின் எங்கே???**

**அடுத்த இதழில் பதில் பதிவு செய்யப்படும்...!!!**

**திருப்பாடல் 23.... தொடரும் !!!**


# புனித கன்னிமரியாளின் வணக்கமாதம்

**எளிய தமிழ் நடைமுறையில் திருத்தியமைக்கப்பட்டு விற்பனையில் உள்ளது.**

**விலை ரூ. 150.00**

**தபால் செலவு தனி**

**கிடைக்குமிடம்**

**மிஷன் அச்சகம்**

**196, மாதா கோவில் வீதி, புதுச்சேரி - 1**

# புனித பேதுரு விவி–ய குறுக்கெழுத்துப் போட்டி – 225

**மே மாத வெளியீடு**

அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ் - தாராபுரம்



வாரம் தவறாமல் 116 ஆண்டுகளாக மலர்ந்து மணம் பரப்பி வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்து வரும் வாசகர் பெருமக்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள், ஏமாற்றம் வலியாய் தெரிந்தாலும் நல்வழியைக் காட்டும் வாழ்க்கைக்கு தன்னம்பிக்கை, நாம் எங்கே பிறந்தோம் என்பது முக்கியமல்ல நாம் என்ன சாதிக்கப் பிறந்தோம் என்பதே முக்கியம். திட்டமிட்டு உழைக்கும் போது திசைகள் தோறும் வெற்றி எட்டாது, உலகில் எதுவுமில்லை. இதை உணர்த்துவதே முயற்சி. ஒவ்வொரு தினமும் விடியலை எடுப்பு, உதயக்கீற்று உன்மேல் படுமுன் சோம்பலை விரட்டு, சுறுசுறுப்பு நெருப்பில் சோம்பலைச் சாம்பலாக்கினால் வெற்றி உனக்கு. விழா மலர்களைப் பறிப்பதற்கு திட்டம் என்கிற செயல்கரங்கள் நீளட்டும், பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை மற்றவர்களுக்குச் செய்யாதே, இந்த உலகில் மிகவும் கடினமான விடயம் மனிதன் அவன் அவனாகவே வாழ்வது. ஆசையில் இழந்த உறவுகளை விட ஆத்திரத்தில் இழந்த உறவுகளே அதிகம். தொடக்கத்தில் பேசப் பேச இனிக்கும் உறவுகள்தான் முடிவுகளில் ஏன் பேசினேன் என்று நினைக்க வைக்கின்றது. சில நேரங்களில் வார்த்தைகளில் கசப்பினையும் கக்குகின்றது. நிதானமாக யோசி, உறுதியாகச் செயல்படு பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்து என்று மகிழ்ச்சியாய் வாழ ஜெபத்துடன் வாழ வாழ்த்துகிறேன்.

இறை ஊழியன்
அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ்

**குறிப்பு**

1. பதில்களை 10.06.2022 க்குள் அனுப்பி வைக்கவும்.
2. பதிலை அதிகாரம் வசனத்துடன் சரியான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.
3. மதிப்பெண்கள் அடிப்படையில் குலுக்கல் முறையில் முதல் 10 நபர்களுக்கு பரிசுகள் ஜுன் மாதம்15ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும்.
4. ஒவ்வொரு மாதமும் பரிசு வழங்க விருப்பம் உள்ளவர்கள் முன் கூட்டியே எனது அலைபேசி எண்களுக்கு தெரியப்படுத்தவும்.

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி**
அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ் **M.A.,MA.,B.Ed** (தலைமை ஆசிரியர்)
தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப்போட்டி - 225
புனித மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638 656.
**Cell : 99423 11068, 95979 75430**

**இடமிருந்து வலம்**

3. மேன்மைப்படுத்துவோர் ______ திரட்டி வைப்போருக்கு ஒப்பாவர்.
6. அது அவர்களைச் ______ பாறாங்கல்லாய் இருக்கும்.
8. உன் முழு உள்ளத்தோடு ஆண்டவருக்கு ______.
10. ______ மாண்புமிக்கோர் வறியவர்.
14. ______ உள்ளத்தைக் கொண்டு உன்னையே பேணிக்கொள்.
17. அவருடைய ______ எப்போதும் அவர்களுடைய வழிகள் மீது இருக்கும்.

**வலமிருந்து இடம்**

1. ______ ஆண்டவரிடமிருந்தே வருகின்றது.
5. ஆண்டவரிடம் திரும்பிச் செல்லக் காலம் ______.
11. அடிமைக்கு உரிமைக் ______ பணி புரிவார்கள்.
16. பாதாளத்தில் இன்பத்தைத் ______ யாது.
18. அவளது ______ வேறுபடுத்துகிறது.
25. தாழ்நிலையினின்று அவர்களை ______ விடுகிறார்.

**மே-ருந்து கீழ்**

2. என்ன ______ ஏற்றுக்கொள்.
13. என் ______ உன்னை உறுத்திக் கொண்டே இருக்கும்.
20. தீர்ப்பு வழங்குவது நரை ______ விழுந்தோருக்கு ஏற்றது.
21. தலைகளிலெல்லாம் ______ பாம்பின் தலையே.
23. ______ நேரம் அவர்கள் உன்னுடன் உறவாடுவார்கள்.
24. புகழத்தக்க செயல்கள் ______ காண்பார்கள்.
26. உளறுவாயரை ஊரார் ______.

**கீழிருந்து மேல்**

4. வைகறையிலேயே தேடுவோர் மகிழ்ச்சியால் ______
7. நீ விரும்பும் ஞானத்தை ______ அருள்வார்.
9. உன் உரிமைச் சொத்தை நீ இழக்க ______.
12. ______ துடைப்போர் போன்று அவர்களிடம் நடந்து கொள்.
15. உனக்குக் கிடைக்கும் நன்மைகளை ______ பயன்படுத்து.
19. திகிலும் இறுமாப்பும் செல்வங்களைப் ______.
22. நெறிகேடுகள் எல்லாமே இரு முனைக் ______ போன்றவை.

**சீராக் - I முதல் 25 அதிகாரங்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 8 | | | 2 |
| | | | | 18 | ▨ | 10 | | | |
| | ▨ | | ▨ | 14 | | | | | |
| | 13 | | | | 16 | | | | 5 |
| 19 | | | | | | | 25 | | |
| 26 | 17 | | | | ▨ | 3 | | | |
| | | 12 | | | | 11 | ▨ | | |
| | | 23 | 21 | 6 | 20 | | | | |
| | | | | 24 | | | | | 9 |
| | 22 | | | | ▨ | 7 | 15 | 4 | ▨ |

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சர்வவியாபியின் ஆண்டு சந்தா புதுப்பிக்கும் போது மணியார்டர் படிவத்தில் முக்கியமாக உங்கள் **சந்தா எண்ணை** மறக்காமல் குறிப்பிடவும். **2022-23** ஆண்டிற்கான சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும்.

**ஆண்டு சந்தா ரூ. 200**

## எல்லாருக்கும் எல்லாமாகிட



**எல்லோருக்கும் எல்லாமுமாகிட வாழ்த்துகிறோம்!!!**
**'ஆண்டவரே என் மேய்ப்பர்!'**
தெய்வீக மேய்ப்பரால் ஆட்கொள்ளப்பட்ட
**'பிரான்சிஸ் கலிஸ்ட்'** என்ற நல்ல ஆயரே!
**பகுத்தறிவுள்ள மந்தையை** மேய்க்கும் பொறுப்பில்
உள்ள உங்களை வாழ்த்துகிறோம்.

**உறவு, அறிவு, பரிவு, பணிவு**
என்ற உக்திகளும்!
**விவேகம், தியாகம், ஆன்மீகம், ஒழுக்கம்**
என்ற அகராதிகளும்!
**வலிமை, உண்மை, நேர்மை, புதுமை**
என்ற கடமைகளும்!
**இயற்கை, கொள்கை, வேட்கை, நம்பிக்கை**
என்ற கைகளும்!
**அன்பு, மாண்பு, பொறுப்பு, ஒன்றிப்பு**
என்ற பூக்களும்!
**உறுதி, நீதி, திருப்தி, நற்செய்தி**
என்ற தீ-க்களும் உம்மில் சுடர்விட!

**சுவாசத்தில்** வாசமாகி! **சந்நியாசத்தில்** சந்தோசமாகி!
**நேசத்தில்** உச்சமாகி! **சர்வதேசத்தில்** வித்தியாசமாகி!
**உலகிற்கு** ஒளியாகிட...!

**நெஞ்சத்தில் நெகிழ்ச்சியுடனும்,**
**மனதில் மகிழ்ச்சியுடனும்,**
**புலன்களில் புகழ்ச்சியுடனும்,**
**நிசப்தமான நீர்வீழ்ச்சி போல்,**
**நிகரில்லா நிலையானவர்,**
**நித்தமும் வழிநடத்த நீடுவாழ்வீராக!!!**
**எல்லோருக்கும் எல்லாமுமாகிட!!!!!!!!**

**டெரன்ஸ் மேரி, FIHM.**

### *விண்ணக பிறப்பின் 16 ஆம் நாள் நினைவு அஞ்சலி*



திருமதி. **C. மேரி விமலா**
மலர்ந்தது 18-11-1942
உதிர்ந்தது 01-05-2022

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"
– யோவான் 11:25

16-05-2022 திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு புதுவை, தட்டாஞ்சாவடி புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் கலந்துகொண்டு அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் வாடும்
**மகன், மருமகள், பேரன்,**
**உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.**

## இயேசுவைப் பின்செல்ல அழைப்புப் பெற்றிருப்பதை உணர்வோம்

**அன்னையர் நாள்:** மே 08, ஞாயிறன்று, பல்வேறு நாடுகளில் அன்னையர் நாள் சிறப்பிக்கப்பட்டதைக் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "அனைத்து அன்னையரையும், இன்று நம்மோடு இல்லாத, ஆனால் நம் இதயங்களில் வாழ்கின்ற அன்னையரையும் நினைப்போம்" என்று கூறினார்.

"அன்னையர் அனைவருக்கும் நம் நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் இந்நேரத்தில், தூக்கமின்மை, களைப்பு, மனப்பதட்டம் உட்பட உடல் முழுவதும் வேதனையை எதிர்கொள்ளும் அன்னையர்களை இந்நாளில் சிறப்பாக நினைத்துச் செபிப்போம்" எனவும் திருத்தந்தை அழைப்பு விடுத்தார்.

**இறையழைத்தல் நாள்:** மே 08 ஞாயிறன்று, "மனிதக் குடும்பத்தைக் கட்டியெழுப்ப அழைப்பு" என்ற தலைப்பில் சிறப்பிக்கப்பட்ட **59வது உலக இறையழைத்தல் நாள்** குறித்தும் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் எல்லாரும், இயேசுவைப் பின்செல்ல அழைக்கப் பட்டிருப்பதை இந்நாளில் உணர்வோம்" என்று கூறினார்.

"இயேசுவின் அழைப்புக்கு "ஆகட்டும்" என்று சொல்லி, அவரது முன்மாதிரிகையைப் பின்பற்றவும், நற்செய்திக்கு ஆற்றும் பணியில், மகிழ்ச்சியோடும், ஆர்வத்தோடும் நம் வாழ்வைக் கையளிப்பதில் கிடைக்கும் மகிழ்வைக் கண்டுணரவும் அழைப்புப் பெற்றிருப்பதை உணர்வோம்" என்று திருத்தந்தை கூறினார்.



## வன்மை மென்மை

- திரு. அல்போன்ஸ் மோசஸ்-புதுச்சேரி-9.

அந்த ஆசிரம குருவிற்கு வயது சுமார் 80 இருக்கலாம். தனக்குப் பிறகு ஒரு நல்ல சீடனிடம் தனது ஆசிரமத்தை ஒப்படைக்க விரும்பினார். ஒருநாள் அனைத்து சீடரையும் வரவழைத்து சீடர்களே **''வன்மை அழியும் மென்மை வாழும்''** இதன் பொருள் என்ன என்று கேட்டார்.

ஒவ்வொருவரும் தனக்கு என்ன புரிந்ததோ அதை அவரிடம் கூறினர். ஆனால் எதுவும் அவருக்கு சரி என்று தோன்றவில்லை. அடுத்த நாள் மீண்டும் அனைவரையும் அழைத்து தன் முன் நிற்க வைத்து தனது வாயைத் திறந்து காட்டினார். எதுவும் பேசவில்லை.

சீடர்களுக்கு அவரது செய்கை வியப்பாக இருந்தது. தனது வாயைப் பார்த்த சீடர்களிடம் என் வாயில் என்ன பார்க்கின்றீர்கள் என்று கேட்டார். ஒரு சீடன் மட்டும் ''ஐயா பற்கள் எல்லாம் அழிந்து போய் காணப்படுகின்றது ஆனால் நாக்கு மட்டும் அழியாமல் இருக்கின்றது'' என்றான்.

''ஆம் சீடர்களே. பற்கள் வன்மைத் தன்மை கொண்டது சீக்கிரம் அழிந்து போகும். ஆனால் நாக்கு மென்மைத் தன்மை கொண்டது. அதனால் அது அழியவில்லை. எனவே எப்போதும் மென்மை தான் வெல்லும்'' என்று ஒரு தத்துவத்தைக் கூறினார். நமது வாழ்க்கையிலும் வன்மை எப்போதும் கூடாது.

பற்கள்தான் நாம் உண்கின்ற உணவை அறைத்து உள்ளே தள்ளுகின்றது. கடினமான பொருட்களால் பற்கள் சேதமடைய வாய்ப்பு உள்ளது. பல்போச்சு என்றால் சொல் போச்சு என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆகவே இந்த பற்களைப் பாதுகாப்பது அனைவரது கடைமையாகும். பல் பாதுகாப்பிற்கு கடைபிடிக்க வேண்டிய சில முக்கிய குறிப்புகள்:

சாப்பிட்ட பின்னர் வாயில் எஞ்சியிருக்கும் உணவுத் துகள்களே பாக்டீரியாவைப் பெருக்கும் இடங்கள். அது தங்காமல் சாப்பிட்டவுடன் வாயைக் கொப்பளிக்க வேண்டும்.

காலை இரவு இரண்டு வேளையும் பல் துலக்க வேண்டும். இரவில் உப்புத் தண்ணீர் கொண்டு வாயைக் கொப்பளிப்பது பற்களுக்கு நல்ல பாதுகாப்பைத் தரும். பற்களை நீண்ட நேரம் துலக்கக் கூடாது. அது ஈறுகளைச் சேதப்படுத்தி விடும்.

பற்சிதைவு ஆரம்பத்தில் ஒரு சிறிய கரும்புள்ளிபோல பல்லின் மேற்பரப்பில் தோன்றும் உடனே பல் மருத்துவரைப் பார்த்து உரிய சிகிச்சை மேற்கொண்டு பல் சொத்தையைத் தவிர்க்கலாம். பற்களை எடுத்திருந்தால் ஆறு மாதத்திற்குள் செயற்கைப் பற்களைக் கட்டிக் கொள்ள வேண்டும்.

பற்களால் நகம் மற்றும் பென்சில் போன்ற பொருட்களைக் கடித்தல், பாட்டில் மூடியைத் திறத்தல், பல் இடுக்குகளில் அகப்பட்டுக் கொண்ட உணவுத் துகள்களை குண்டுசி மற்றும் சேப்டிபின் போன்றவற்றால் எடுக்க முயற்சிப்பது கூடவே கூடாது.

புகையிலை மற்றும் மதுப் பழக்கம் ஈறுகளில் புற்று நோயை ஏற்படுத்தும் சாத்தியம் இருப்பதால் அவற்றைத் தவிர்ப்பது பல் பாதுகாப்பிற்கு உதவும்.

பற்களிலுள்ள எனாமலை கார்பன்டை ஆக்சைடு கலந்த குளிர்பானங்கள் அரிக்க நேரிடும் என்பதால் ஸ்ட்ரா வைத்து குடிப்பது சாலச் சிறந்தது. ஒரு பல் கட்ட குறைந்தது ஆயிரத்து ஐநூறு ரூபாய் ஆகும் என்பதால் பல் பாதுகாப்பே நமக்கு சேமிப்பு.

## கேள்வியும் பதிலும்

திரு. ஜெயராஜ் தானியேல்.
முத்தியால்பேட்டை, புதுவை-3



சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் நடந்த ஒரு நிகழ்ச்சி.

பிரான்சு நாட்டிலிருந்து வந்திருந்த நண்பர் ஒரு சமஸ்கிருத மொழி ஆராய்ச்சியாளர். மொழிகள் குறித்துப் பேசிக்கொண்டிருந்தபொழுது இடையில் கிறிஸ்துவைப் பற்றி பேச்சு திரும்பியது. நண்பர் என்னிடம், "கிறிஸ்து எனக்காக ஏன் உயிர்விட வேண்டும்?", என்று கேட்டார். சிறிது நேரம் யோசித்த பின், என் பள்ளி நாட்களில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் வாயிலாக அவருக்கு விடையளித்தேன்.

ஞாயிற்றுக்கிழமைகளில் நான் நண்பர்களோடு சேர்ந்து வீட்டின் அருகில் இருக்கும் மைதானத்தில் கிரிக்கெட் விளையாடுவது வழக்கம். விளையாடும் பொழுது ஒவ்வொரு முறையும் மைதானத்திற்கு சிறிது தொலைவில் உள்ள ஒரு வீட்டின் கண்ணாடி சன்னலை பந்து உடைத்துவிடும். நாங்கள் வீட்டிற்குள் ஓடி ஒளிந்து கொள்வோம். அந்த வீட்டில் தனிமையில் வசிக்கும் பெரியவர் வெளியே வந்து பார்த்து சத்தம் போட்டு ஓய்ந்து விடுவார்.

ஒரு சமயம் நான் அடித்த பந்து அவருடைய சன்னலைப் பதம் பார்த்துவிட்டது. ஓடிப் போய் வீட்டில் ஒளிந்து கொண்டேன். நிலைமையைப் புரிந்துகொண்ட என் தந்தை, கையைப் பிடித்து வெளியே இழுத்து வந்து, அந்த முதியவரின் முன்னால் நிறுத்தி, "இதோ இவன் தான் சன்னலை உடைத்தவன். நல்லா நாலு சாத்து சாத்துங்கள்" என்றார். "சாத்தி என்னங்க செய்யறது? இப்படித் தான் அடிக்கடி நடக்கிறது. உங்கள் மகனென்றும் பாராமல் நீங்களே காட்டிக் கொடுத்ததால் யார் காரணம் என்று தெரிந்துவிட்டது. ஆனால், உடைந்த சன்னலை அடிக்கடி சரி செய்து கொள்ள என்னிடம் பணம் இல்லையே", என்று பரிதாபமாக சொன்னார் முதியவர். "கவலைப்படாதீர்கள். நான் செப்பனிட்டுத் தருகிறேன்", என்று வாக்குறுதியளித்தார் தந்தை. அதன்படி அந்த முதியவரின் சன்னலை மாற்றி புது சன்னல் வைத்துக் கொடுத்தார்.

இந்த நிகழ்ச்சி என்னுள் பலவிதமான கேள்விகளை எழுப்பியது: "நான் ஏன் இந்தத் தவறை செய்தேன்? என் தவறுக்காக என் தந்தை ஏன் சிரமப்பட வேண்டும்? என்னைத் தனியார் பள்ளியில் படிக்க வைக்க எவ்வளவு கடன்பட்டாரோ? அதை அடைப்பதற்கு என்ன பாடுபட்டிருப்பார் என்றெல்லாம் நினைத்து என் மனம் வேதனை அடைந்தது. தந்தையின் பாடுகளுக்கு என்ன கைம்மாறு செய்வது? அவருக்கு உகந்த பிள்ளையாக வாழ்வதுதான் என்று உறுதி எடுத்துக் கொண்டேன்."

இதே கேள்விகளை அந்த ஆராய்ச்சியாளரான நண்பரிடம் கேட்டு, நாம் செய்த பாவங்களுக்கு தந்தையாம் இறைவன் பொறுப்பேற்று, தன் மகனுடைய பாடுகளின் வழியாக நம்மை மன்னித்து மீட்டுக் கொண்டார்" என்றேன். அவர் பதிலேதும் சொல்லவில்லை. ஆனால், அவர் முகம் சிறுத்தது கண்டு மகிழ்ந்தேன்.

## விண்ணக வாழ்வின் 6-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:12-06-1943



மறைவு: 21-05-2016

### தே. ஜோதி

ஆண்டவரே உம்மை நாடி வருவோரை நீர் கைவிடுவதில்லை – திபா 9:10

இரக்கம் நிறைந்த யேசுவே! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, தன் வாழ்வின் கடமைகளை முடித்து இப்பூவுலகைவிட்டு உம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட எங்கள் அன்புத் தந்தையும், எங்கள் குடும்பத் தலைவருமான இவருக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம். இவரது ஆத்துமத்திற்கு நித்திய ஒளியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் தந்தருளும் சுவாமி – ஆமென்.

*ஒரு கர்.மங்.திரி1*

பிரிவால் துயருறும்

**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

கடம்பூர் (மையனூர் பங்கு)

## இறைவனில் இணைந்த 12-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 20-11-1950



மறைவு: 16-05-2010

### திரு. L. லப்பாஸ் மரி பிலோமேன் பெலிசியன்

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

16-05-2022 திங்கள் காலை 6.00 மணிக்கு புதுவை நெல்-த்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் நினைவு திருப்ப-நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

மனைவி:

**A. மரி ஜெயந்தி லப்பாஸ்**

நெல்லித்தோப்பு, புதுவை.

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம்: 18-05-1975



மறைவு: 20-05-2021

### திருமதி. S. –லி– கிறிஸ்டி

ஆண்டவரின் கையில்; நீர் அழகிய மணிமுடியாக திகழ்வாய் – எசா 62:3

20-05-2022 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, திரு இருதய ஆண்டவர் பசி-க்காவில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் கலந்துகொண்டு செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

**குடும்பத்தினர்.**

## இறைவனில் இணைந்த 19-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 28-02-1945



மறைவு: 17-05-2003

### ஜோசப் அனந்து M.A.

Dy.Director, Dept.of Statistics, S/o. Dr. A. ANANDOU

ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக! இவரது ஆன்மா சாந்தியடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

17-5-2022 அன்று காலை 6.30 மணிக்கு புதுவை, ரெயின்போ நகர், புனித ஜான்மரி வியான்னி ஆலயத்திலும், காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

மனைவி, மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், சகோதரி மற்றும் அனந்து குடும்பத்தினர்கள்.

## விண்ணக வாழ்வின் 17-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 8.11.1974



மறைவு: 23.5.2005

### Mrs. ஆனி சித்ரா அனந்து B.A.B.L

(Daughter in law of late Joseph Anandou)

"என்னை அறிந்து நேசித்தவர்களே, மரணத்தில் என்னை மறவாதீர்கள்"

ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப் பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக! இவரது ஆன்மா சாந்தி யடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

23-5-2022 காலை 6.30 மணிக்கு புதுவை, ரெயின்போ நகர் புனித ஜான்மரி வியான்னி ஆலயத்தில் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும் கணவர்

அனந்து ஜேம்ஸ்ராஜ்

மகள்கள், சகோதரர், சகோதரி

அனந்து குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 03.10.1952



திருபொழிவு: 01.05.1979

### Fr. Dr. Gerard Pushparaj Changivy

மறைவு: 15-05-2020

ஏனெனில் நான் வாழ்கிறேன், நீங்களும் வாழ்வீர்கள் - யோவா 14:19

15-05-2022 அன்று காரைக்கால், புனித தேற்றரவு அன்னை ஆலயத்தில் காலை 5.30, 7.30, மாலை 5.00 மணிக்கு திருப்ப- நிறைவேற்றப்படும்.

நினைவில்

**அண்ணன் குடும்பத்தினர்,**

**அக்கா குடும்பத்தினர்,**

**தங்கை குடும்பத்தினர்.**



திருமதி.D.**மேரி ஜோஸ்பின் பீட்டர்**

Retd.Tr.

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வர் -யோவா 11.25

மண்ணில் 30-4-1935 விண்ணில் 15-05-2021

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஜெபம்

நித்திய பிதாவே! எங்கள் குடும்பத்தின் விண்மீனாய்த் திகழ்ந்து, தனது அன்பாலும் பாசத்தாலும், எங்கள் இதயத்தில் நீங்காத இடம் பிடித்து, இன்று உம்முடைய திருவடிகளுக்கு வந்துள்ள எங்கள் அன்பு தாய்

திருமதி. D. **மேரி ஜோஸ்பின் பீட்டர்**

அவர்களுக்கு பாவப் பொறுத்தலையும், முடிவில்லா பிரகாசத்தையும், சமாதானத்தில் இளைப்பாற்றியையும் அளித்தருள வேண்டுமென்று உம் திருமகன் இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம் - ஆமென்.

பிரிவால் துயருறும்

மகள்: **ஹெலன் ராணி,** மருமகன்: **சேவியர் சார்லஸ்**

மகன் : **பென்னி,** மருமகள்: **சுனிதா,**

**பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேத்திகள்.**

**திருப்ப-:** 15.05.2022 ஞாயிறு காலை 7.30 மணிக்கு, புதுவை தூய இதய ஆண்டவர் பசி-க்காவில் திருப்ப- நிறைவேற்றப்படும்.



அருள்தந்தை

**செ. லூர்து செல்வமணி**

மண்ணில்: 29-04-1958

இறைபணியில்: 28-12-1989

விண்ணில்: 21-05-2021

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

இருதயம்பட்டு பங்கில் 6 வது குருவான இவர் விண்ணக பேரின்பத்தில் இளைப்பாறும் செல்வநாயகம் ( ஆசிரியர்) - லூர்துமேரி இவர்களின் மகன். முசாபர்பூர் மறைமாவட்டத்திற்காக குருவாகி 16 ஆண்டுகள் பல்வேறு பணித்தளங்களில் உழைத்து, உடல்நலக் குறைவால் வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை திருத்தலத்தில் 3 ஆண்டுகள் ஆன்ம குருவாகவும், நமது மறைமாநிலத்தில் இருதயம்பட்டு பங்கு மற்றும் விரியூர் மறைவட்டத்தில் 13 ஆண்டுகள் உடன் உழைப்பாளராகவும் பணியாற்றினார். "நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கெண்டேன்." (2 திமொத்தேயு 4:7) என்று கிறிஸ்துவின் உயிர்ப்பில் விசுவாசம் கொண்டு உயிர்ப்பின் மாட்சியில் பங்கு பெற்ற அவருக்கு நினைவு திருப்பலி 21.05.2022 மாலை 5 மணிக்கு இருதயம்பட்டு தூய விண்ணரசி அன்னை ஆலயத்தில் நடைபெறும்.

உங்கள் செபங்கள் வேண்டி நிற்கும்

**செல்வநாயகம் ஆசிரியர் குடும்பத்தார்**

இருதயம்பட்டு

## விண்ணக வாழ்வின் நினைவு அஞ்ச-

இறைவா! எங்கள் குடும்பத்தில் தூண்களாய் திகழ்ந்து, அன்பின் வடிவாய் எங்களை பேணிக்காக்க பல தியாகங்களைச் செய்து எங்களை, வாழ்க்கை முன்னேற்றப் படிகளில் ஏற்றிவிட்டு உமது முடிவில்லா ஆட்சியில் சமாதானத்தில் இளைப்பாற உம்முடைய வான்வீட்டிற்கு உம்மால் அழைத்து கொள்ளப்பட்ட உமது அடியார்களுக்கு நித்திய இளைப்பாற்றி அருள வேண்டுகிறோம்.




இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-05-2022 ஞாயிறு காலை 11.00 மணிக்கு, உப்பளம் **புனித சவேரியார் ஆலயத்தில் திருப்ப-யும்,** அதனைத் தொடர்ந்து **புனித சவேரியார் மேய்ப்புப் பணி இல்லத்தில்** நடைபெறும் செப வழிப்பாட்டிலும் கலந்து கொண்டு செபிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

**குடும்பத்தினர் மற்றும் உறவுகள்.**

## முதலாம் ஆண்டு நினைவேந்தல்



**திரு.ஞா. போனிபாஸ் ஜூ-யன்**

நிர்வாக அதிகாரி, ஜிப்மர் (ஓய்வு)

மண்ணில்: 19-06-1938

விண்ணில்: 12-05-2021

"சகோதரரே! நீங்கள் வந்து சேர்ந்திருக்கும் சீயோன்மலை, வாழும் கடவுளின் நகர் விண்ணக எருசலேம்" - (எபி 12:22)

எங்கள் இறைவனாகிய தந்தையே! இவ்வுலகில் 83 ஆண்டுகள் வாழ்ந்து கடந்த ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளன்று உம் வான்வீடு நாடி வந்துள்ள உம் அடியார்

**திரு. ஞா. போனிபாஸ் ஜூ-யன்**

அவர்கள் நிலைவாழ்வு பெற எங்கள் மன்றாட்டை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவருக்கு, நீர் கொடுத்திருந்த பெற்றோருக் காகவும், உடன் பிறப்புகளுக்காகவும், அவரது நல்ல எடுத்துக்காட்டான குடும்ப வாழ்விற்காகவும் பாசமுள்ள பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகளுக்காகவும் அவர் சார்பாக உமக்கு எம் நன்றியை காணிக்கையாக்குகின்றோம்.

அவரை நீர் உம் கண்ணின் மணிபோல இவ்வுலகில் காத்து வந்தீர். மறு உலகிலும் அவரை நம் அன்னைமரியின் மடியில் இருத்தி காத்திடுவீராக!

இழப்பிலும் நம்பிக்கையுடன் மன்றாடும்

மனைவி: **திருமதி. பிலோமினா பெ-சிட்டா**

பிள்ளைகள் : **-யோனா, ஹெலேனா, சுசான்னா, கிறிஸ்டினா**

**மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**திருப்ப-:** 12.05.2022 காலை 6.00 மணிக்கு, லூர்து தொலைக்காட்சியில் தூய இதய ஆண்டவர் பசி-க்காவி-ருந்து ஒளிபரப்பப்படும்.

# அருள்தந்தை அந்தோணி தும்மா அடிகளார் இறையடி சேர்ந்தார்



அருட்தந்தை ஆன்டணி தும்மா அவர்கள் திரு. தும்மா சைமன், திருமதி. தும்மா அன்னம்மாள் அவர்களின் மகனாக 06-07-1932, செங்கல்பட்டு மாவட்டம் தச்சூரில் பிறந்தார். அப்போது தச்சூரானது பாண்டிச்சேரி-கடலூர் உயர்மறைமவாட்டத்தோடு இணைந்திருந்தது.

09.04.1963 ம் ஆண்டு பெங்களூர், புனித பிரான்சிஸ் சேவியர் பேராலயத்தில், அன்றைய பெங்களூர் பேராயர் மேதகு தாமஸ் பொத்தகாமுரி அவரால் திருப்பொழிவு செய்யப்பட்டார்.

**பணியாற்றிய இடங்கள்:**

15-05-1963 - பிப்ரவரி 1965 முதல் 1968 வரை அத்திப்பாக்கம், நெய்வேலி போன்ற பங்குகளில் உதவிப்பங்குத் தந்தையாக பணியாற்றினார்.

15-05-1963 முதல் மே 1968 வரை அத்திப்பாக்கம் மற்றும் நெய்வேலி பங்குகளில் உதவி பங்கு தந்தையாக பணியாற்றினார்கள். தும்மா அடிகள் அவர்கள் 1968 முதல் 1997 வரை அத்திப்பாக்கம், நெய்வேலி, எறையூர், கூனன்குறிச்சி, கக்கனூர், ஒதியத்தூர், கள்ளக்குறிச்சி போன்ற பங்குகளில் பங்கு தந்தையாக கடினமாக உழைத்தார்கள். கள்ளக்குறிச்சி வட்டார முதன்மை குருவாகவும் பணி செய்தார்கள்.

நவம்பர் 6, 1996 அன்று அப்பல்லோ மருத்துவ மனையில் இதய அறுவை சிகிச்சை செய்துகொண்டு எம்மாவுஸ் குருக்கள் ஓய்வு இல்லத்தில் ஓய்வெடுத்தார்.

ஜூன் 1997 - 09-07-2002 M. N குப்பத்தில் நவ கன்னியருக்கு ஆன்ம வழிகாட்டியாக இருந்தார். பின்னர் 20-07-2002 முதல் 2008 வரை தெற்குணம், திண்டிவனம், பாகூர் போன்ற பங்குகளில் பங்கு குருவாக தன் பணியை தொடர்ந்தார்கள். வயது மூப்பின் காரணத்தால் 17-06-2008 முதல் 20-06-2012 வரை, கடலூர், புனித ஆக்னஸ் இளங்குருமடத்தில் ஆன்மிக ஆலோசகராக பணியாற்றினார்.

ஜூலை 2012 ல் ஓய்வுபெற்று, பாண்டியிலுள்ள கோலாஸ் நகர், எம்மாஸ் குருக்கள் இல்லத்தில் ஓய்வு நிலையில் இருந்தார்.

29.04.2022 அன்று உடல்நலக்குறைவால் பாண்டிச்சேரி, குளுனி அருட்சகோதரிகள் நடத்தும் புனித வளனார் மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

06.05.2022 அன்று காலை 11.00 மணிக்கு மறைமாவட்ட பொருளாளர், அருட்தந்தை கிரகோரி அவர்கள் நோயில் பூசுதல் அருட்சாதனத்தை வழங்கினார்கள். அன்று இரவு 9.00 மணிக்கு பேராயர் அவர்கள் அருட்தந்தையை மருத்துவமனையில் சந்தித்து செபித்தார்கள்.

08 மே 2022 ஞாயிறு அன்று அதிகாலை 1.45 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

**அடக்க நிகழ்வுகள்:**

அருட்தந்தையின் உடலானது 09.05.2022 திங்கள் காலை 6.00 மணியிலிருந்து மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அவர் பணியாற்றிய பங்குகளிலிருந்து திரளான மக்களும், அருட்தந்தையின் சொந்த ஊரான தச்சூரிலிருந்து உறவினர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். காலை 10 மணிக்கு புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில், மேதகு பேராயர் பிரான்சிஸ் கலிஸ்த் அவர்கள் தலைமையில் அடக்கத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

அருட்திரு. A.S. அந்தோணிசாமி அடிகளார் அடக்கத் திருப்பலியில் மறையுரையாற்றினார். அருட்தந்தை தும்மா அவர்கள் எல்லோருடனும் அன்பாக பழகியவர், யாருடனும் மனக்கசப்புக் கொள்ளாதவர், மிகவும் சுறுசுறுப்பாக பணியாற்றக் கூடியவர். அவர் நலிவுற்ற மக்களுக்காக அயராது உழைத்தவர். பாஸ்கா காலத்தில் இருக்கின்ற நாம் நல்லாயன் வாரத்தில் உள்ளோம். நல்லாயன் இயேசு தன்னிடம் தந்தை ஒப்படைத்த எவரையும் ஒருபோதும் கைவிடுவதில்லை, நம்முடைய அருட்தந்தை அந்தோனி தும்மா அவர்களையும் நல்லாயன் இயேசு தன் கரத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறார். அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக நல்லாயன் இயேசுவிடம் செபிப்போம்" என்று மறையுரை ஆற்றினார்.

திருப்பலிக்குப் பின் தச்சூர் மண்ணின் மைந்தர் அருட்பணி ஜோர்னஸ் கோபு அவர்கள் இரங்கல் செய்தி வழங்கினார். அருட்தந்தையின் உறவினர்களும் நன்றி கூறினார்கள்.

பின்னர் அருட்தந்தையின் உடலாது, பேராலயத்திற்கு அருகில் உள்ள குருக்கள் கல்லறையில் பேராயரின் செப அர்ச்சிப்போடு நல்லடக்கம் செய்யப்பட்டது.

**இரக்கம் மிகுந்த இறைவன் நம் அருட்தந்தைக்கு நித்திய இளைப்பாற்றியை அளிப்பாராக.**

Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.